# புறநானூற்றில் அரசியல் அறங்கள்

**முனைவர் வ. கணபதிராமன்**
இணைப்பேராசிரியர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஏப்ரல்

வருடம்: 2024

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7727

***ஆய்வு சுருக்கம்***

*ஆதி காலத்தில் அரசு தோன்றுவதற்கு முன்பு மனிதன் இயற்கையின் சட்டத் திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்து வந்தான். நாளடைவில் நாகரீக வளர்ச்சியின் காரணமாக, மனிதர்களிடையே ஒற்றுமை உணர்ச்சி உருவாகியது. அதன் காரணமாக மனிதனுக்கெனப் பண்பாடு உருவாகியது. பண்பாட்டின் காரணமாக மக்கள் தங்களுக்குள் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அதன்படி மக்கள் தங்களுக்கு ஒரு தலைவனை நியமித்துக் கொண்டு, அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க ஒப்பு கொண்டனர். இதன் விளைவாக அரசு என்னும் அமைப்பு தோன்றியிருக்கலாம். மன்னன் நாட்டின் உயிராகக் கருதப்பட்டான். நாட்டைக் காப்பதில் வீரம் மிக்க காவலனாகவும், மக்களையும், தன்னைச் சார்ந்த சுற்றத்தையும் காப்பதில் தாய் போலவும் விளங்கினான். நேர்மையான ஆட்சியின் சின்னமாகச் செங்கோல் போற்றப்பட்டது. இரவலர்களைக் காக்கவும், சுற்றம் பேணவும், பிறர் போற்றவும், புகழுக்காகவும் கொடை அளித்தலை மன்னர்கள் மேற்கொண்டிருந்தனர். மன்னர்கள் குடிமக்களைக் காப்பதைத் தம் தலையாய அறமாகக் கொண்டிருந்தனர். பெருமைக்காகவும், புகழுக்காகவும், செல்வத்தின் காரணமாகவும் நாட்டின் எல்லையை விரிவுபடுத்தும் நோக்குடனும் போர் மேற்கொள்ளப் பெற்றது. எளியோர்களுக்கு மதிப்பு ஏற்படும் வண்ணம் போர் நிகழ்வுகள் வகுக்கப்பெற்றன. மாலைக்காலத்திற்குப் பின் போர் புரிதல் நடைப்பெறவில்லை. தமிழர்களின் நிலப்பாகுபாடு குறித்த வாழ்க்கை முறைகளும் மறம் சார்ந்த அறங்களாகப் போற்றப்பட்டன. போர்க்களத்தில் விழுப்புண் பெற்று இறத்தல் பெருமைக்குரியதாகக் கருதப்பட்டது. மன்னனின் வீரத்தையும், இளமையையும் இழிந்து பேசும் நிலையில் மாற்று மன்னன் மீது வஞ்சினம் கூறிப்போர் புரிதல் நிகழ்ந்தது. போர்கள் நடைபெறுவது புலவர்களின் தூதாலும் மதிநலத்தாலும் தடுக்கப்பெற்றது. இணையான ஆற்றல உடைகீயாருடன பபா புதல் அறமாகக் கருதப் பெற்றது. போர் முடிந்த பின் பகை நாட்டவர் மீண்டும் வலிமை பெறாவண்ணம் நாட்டின் விளை நிலங்கள், மன்றங்கள், கட்டடங்கள் முதலியவற்றை அழித்தல் மேற்கொள்ளப்பெற்றது. அரசனுக்கு உறுதுணையாக விளங்கும் அமைச்சரும் நடுவுநிலை உடையவராக இருத்தல் வேண்டும் என்னும் கருத்து வலியுறுத்தப் பெறுகிறது. பசுக்களைக் கவர்தலில் தொடங்கிய குழுப்போர் முறை பிற்காலத்தில் பெரிய போர்கள் நிகழ்வதற்கும் காரணமாக அமைந்தது. ஆண்களேயன்றி பெண்களும் போரில் விருப்பம் உடையோராக, வீரம் மிக்கவர்களாக திகழ்ந்தனர். போருக்குச் செல்லும் முன் நிமித்தம் பார்த்தல் நடைமுறையில் இருந்தது. காவல் மரம் வெற்றியின் சின்னமாகக் கருதப்பட்டது. காவல் மரத்தைப் பகை மன்னன் வெட்டுதல் வீரத்திற்கு இழுக்கெனக் கருதப்பட்டது.*

*மன்னனின் குடை மக்களைக் காக்கும் சின்னமாகக் கூறப்பெற்றது. மன்னனின் மனநிலை அறிந்து அறம் உரைக்கும் தன்மை போர்களாக காவிதிமாக்கள் போற்றப்பட்டனர். குற்றங்களுக்கு நடுவுநிலையோடு கடுமையான தண்டனைகள் விதிக்கப்பெற்றன. முதலானவை புறநானூறு வழி அறியலாகும் புறம் சார்ந்த விழுமியங்களாகும் அவ்வகையில் இந்தக் கட்டுரைத் மேற்குறிப்பிட்டவைகளை பல்வேற பாடல்களில் காணப்படும் குறிப்புகள் வழி வகுத்தும் தொகுத்தும் பகுத்தும் ஆய்வு மேற்கொள்வதாக அமைகிறது.*

## முன்னுரை

பண்டைய தமிழ்ச் சமுதாயத்தில் அகம், புறம் என்னும் இரு கூறுகள் போற்றப்பட்டன. அகம் இல்வாழ்க்கைக்கும், புறம் இல்வாழ்க்கை அல்லாத பிற ஒழுக்கங்களுக்கும் பற்றுக் கோடாக அமைந்தன. சங்க காலப் புறப் பாடல்களும் அகப்பாடல்களும் வீரத்தையும் காதலையும் மட்டுமே இரு கண்களாகப் போற்றாமல் சமூகத்தில் உள்ள அனைத்துக் கூறுகளையும் சிறப்பித்துக் கூறுவதில் முன் நிற்கின்றன. அவ்வகையில் இந்தக் கட்டுரை புறநானூற்றில் வலியுறுத்தப்படும் அரசியல் அறங்கள் பற்றி ஆய்கிறது.

## அரசின் சிறப்பு

ஒரு நாட்டின் வாழ்வும், வீழ்வும் ஆட்சித் திறனில் இருக்கின்றது. மக்களைக் காக்கும் முறை, ஆட்சி செய்யும் முறை முதலியவை அரசன் எத்தகைய தன்மை உடையவன் என்பதைக் காட்டிவிடும். அதனால் அரசன் சிறந்தவனாக இருத்தல் நாட்டிற்கு நலம் பயப்பதாகும். கொடைத் தன்மை மிக்கவனாக இருக்கின்ற போதும் எளியவர்களை ஆதரிக்கின்ற போதும் அரசனின் சிறப்புகள் பெரிதும் வெளிப்படுகின்றன. நல்லாட்சி மிக்க நாட்டில் தான் அனைத்து அறங்களும் சிறந்து விளங்கும்.

அரசியலை எவரும் அசட்டை செய்து விட முடியாது. அதை மறந்து விடவும் முடியாது. நாட்டின் உயிர் ஆட்சி தான். நாட்டுக்கு நலம் புரியும் திறமுள்ள அரசியல் வேண்டும். ஒழுங்கான ஆட்சியுள்ள நாடு தான் உயர்ந்து நிற்கும். நல்ல ஆட்சியற்ற நாட்டிலே எந்த நன்மையும் நிலவாது[1] என்பார் சாமி. சிதம்பரனார்.

நாடு எவ்வளவு வளம் பெற்றதாக இருந்தாலும் அதனால பலணலலை. நாட்டை நல்வழியில் நடத்திச் செல்ல நல்ல தலைமை வேண்டும். அதனால் தான் மோசிகீரனார்.

**நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
**அதனால், யான் உயிர் என்பது அறிகை.**
**வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே2**

நாட்டு மக்களின் உயிரைக் காப்பது நெல்லும் நீருமன்று. அந்நாட்டை ஆளும் மன்னனே எனக் குறிப்பிடுகின்றார். சிறந்த அரசனை மனதில் கொண்டு வள்ளுவர்,

**முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறை என்று வைக்கப்படும்[3]**

என்கிறார். நீதிப்படி அரசாட்சி நடத்தி மக்களைக் காப்பவனே சிறந்த அரசன் எனக் குறிப்பிடுகின்றார். பண்டைக் காலத்தில் தன்னலமற்ற மன்னர்கள் வாழ்ந்தனர். மாற்று நாட்டு மன்னர்கள் மக்களை இகழும் போதும் அவர்களில் பலரை வென்று நாட்டைக் காப்பேன் என்று வஞ்சினம் கூறும் நிலையை,

சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
**அருஞ்சமஞ் சிதையைத் தாக்கி முரசமொடு**
**ஒருங்குஅகப் படேஎன் ஆயின் பொருந்திய**
**என்நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது**
**கொடியன் எம் இறை எனக் கண்ணீர் பரப்பிக்**
**குடி பழி காற்றும் கோலேன் ஆகுக[4]**

என்று பாடல் எடுத்தியம்புகிறது.

நாடு சிறக்கவும் முறைப்படி நாட்டில் அனைத்துச் செயல்களும் நடைபெறவும் சிறந்த அரசன் தேவை என்பதையே இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன.

## செங்கோன்மை

“செங்கோன்மை” என்பது மன்னனின் நீதித் தன்மையைக் கூறும் சொல்லாகும்.

முறையறிந்து நீதி வழங்கலும், முறையறிந்து அறம் செய்தலும், நாட்டை காத்தலும், மக்களைப்பேணுதலும்அரசனின்தலையாய அறங்களாகும். மன்னன் நடுவு நிலைமை மாறாமல் இருக்கின்ற போதுதான் நாடு சிறக்கும். தவறாக நீதி வழங்குகின்றபோது அரசனின் அறமே கூற்றாக நின்று அழிவை உண்டாக்கும் இயல்புடையது. அரசன் அதிகாரத்தைச் சுமந்திருக்கும் போது வேலை பாட்டோடு செய்யப்பட்ட கோலைக் கையில் கொண்டிருப்பான். அதுவே செங்கோலாகும். அரசனின் ஆட்சி நேர்மையாது என்பதற்கு எடுத்துக்காட்டாக அது நேராகச் செய்யப்பட்டிருக்கும். அரசன் செய்யும் நால்லாட்சிக்கு அடையாமாகவே வெண்கொற்றக் குடையும், செங்கோலும் கொள்ளப்பட்டன.

***அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து***
***முறைவேண்டு பொழுதின் பதன் எளியோர்***[5]

என்னும் பாடலடிகள் அக்கருத்திற்கு அரண் செய்கின்றன.

குற்றங்களை முறைபடிக் கேட்டறிந்து நீதி வழங்கும் முறைமை அறங்கூறு அனவயத்தில் நிகழ்த்தப்பெறும். அறங்கூறு அவையம் அச்சம், அவலம், ஆர்வம் முதலியன நீங்கிய இடமாகும். செம்மையான உண்மைகளால் அறத்தோடு விளங்குவது அறங்கூறு அவையமாகும்.[6]

நீதி உரைப்பவர்கள் பந்தம், பாசம், உறவு நிலைகள், பற்றுள்ளம் முதலியவற்றினின்றும் நீங்கியயர்களாக இருந்து நீதி வழங்க வேண்டுமென்பதை மேற்கண்ட கருத்து உறுதிப்படுத்துகின்றது. அறக்கடவுள் பொருந்திய அறங்கூறு அவையத்தில் காட்சிக்கு எளியவதாய் இருந்து கேட்க வேண்டிய காலத்து நீதி கேட்பர்.[7]

## குடை

***அரசாணை அலங்கரிக்கும் வெண்கொற்றக் குடை தூய்மை, கொற்றம், வெற்றி முதலியவற்றின் சின்னமாகப் போற்றப்படுகின்றது. மக்களைத் துயரின்றித் தண்ணியதாகக் காப்பதால், காவல் வெண்குடை***[8] எனப் பெயர் பெற்றது. முழுமதியின் ஒளி குளுமை தரக்கூடியது.

***உலவுமதி உருவின் ஓங்கல் வெண்குளிட***
***நிலவுக் கடல் வரைப்பின் மண்ணகம் நிழற்ற***[9]

முழுமதியினது வடிவத்தைக் கொண்ட உயர்ந்த வெண் கொற்றக் குடையை உடையவன் அரசன் எனக் கூறப் பெறுகின்றது. மன்னனின் காவல் திறனை உணர்த்தும் வகையில்,

***கடனறி மன்னர் குடைநிழல் போல்*** [10]

என்னும் பாடலடி உணர்த்துகிறது.

மன்னனின் வெண் கொற்றக் குடையானது மன்னனை இயற்கைச் சீற்றங்களில் இருந்து காப்பதற்கன்று. அது தம் ஆட்சியின் கீழ் வாழும் மக்களைக் காப்பதையே கடமையாகக் கொண்டதாகும்.[11]

மன்னனது வெண்கொற்றக் குடை அவனது அரசாட்சியின் சிறந்த சின்னமாகவும், தன்மையான ஆட்சியின் அமைப்பாகவும் திகழ்ந்துள்ளது. நல்லாட்சியின் சின்னமாக குடை விளங்குகிறது.

## கொடைத்திறம்

தன்னை நாடி வந்த இரவலர்களுக்கும், புலவர்களுக்கும் நல்ல மனதோடு பொருள்களைக் கொடுத்து வறுமையை நீக்கும் உயர்ந்த உள்ளம் படைத்தவர்கள் சங்ககாலமன்னர்கள்.தங்களின்பொருள்கள் பிறருக்கும் பயன்படுமாற்றையும், பொருள்கள் பெறும் போது அவர்களின் மகிழ்வு கண்டு மனநிறைவு கொள்வதும் அவர்களின் உயர்ந்த குணமாகும். சங்க மன்னர்களின் வள்ளண்மையைச் சங்கப் பாக்கள் பல எடுத்துக் கூறுகின்றன. தன் செல்வம் தனக்கன்றிப் பிறர்க்கும் பயன்பட வேண்டும் என்னும் உயரிய மனத்தைச் சங்க இலங்கியங்களில் காண முடிகிறது. மன்னர்கள் தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் உள்ளம் கொண்டவர்கள்.

***இனியவை பெறினே தனி தனி நுகர்கேம்***
***தருகென விழையாத் தாவி னெஞ்சத்துப்***

***பகுத்தூண் டொகுத்த வாண்மைப்***
***பிறர்க்கென வாழ்த்தி நீ யாகன் மாறே[12]***

இனியவை பெற்ற போதும் தான் மட்டும் தனித்து உண்ண விரும்பாமல் பிறருக்கும் பகுத்துக் கொடுத்து உண்ணும் தன்மை பெற்ற மன்னன் தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்பவன் என்பதை இப்பாடல் எடுத்துக் கூறுகின்றது.

புலவர்கள், இரவலர்கள் மன்னனை நாடிச்சென்று பரிசில் பெற இயலாத நிலையில் அவனுக்கு ஏற்படும் துன்பம் அளவற்றது. அளவறிந்து பொருள் கொடுக்க முடியாத நிலை புரவலனுக்கு ஏற்படுகிற போது அது பெருந்துன்பமாக அமையும்

***பாடுபெறு பரிசின் வாடினன் பெயர்தல்என்***
***நாடு இழந் ததனினம் நனி இன் னாது என[13]***

நாடி வந்தவர்க்குப் பொருளை எப்படியேனும் முயன்று கொடுத்தல் நற்செயலாகும்.

**போர் அறம்**

பண்டைக் காலத்தில் மன்னராட்சியில் மக்கள் உயரிய மன்னர்களால் நல்வாழ்க்கை வாழ்ந்த போதும், போரும் பூசலுமான சூழல்களை உணர்வதற்கு இடம் இருந்தது. ஒருவரை ஒருவர் போரில் வெற்றி கொள்வது பெருமையாகக் கருதப்பட்ட காலம் அது. அதனால் வீரத்திற்குப் பெரிய அளவில் சிறப்பளிக்கப் பெற்ற காலமாக இருந்தது. போச்கள் நடைப்பெற்ற போதும் அப்போர்கள் சாதாரண மக்களுக்கு இடர்கள் ஏற்படுவதினின்று சாத்த காலமாகும்.

பண்டைக்காலப் போர் முறை பசுக்களைக் கவர்தலில் தொடங்கி நடைபெறும். நிரை கவர்தல் வெட்சித் திணையின் பாற்படும். பகைவர் நாட்டில் இருந்து கொண்டு வந்த பசுக்களைப் புலவர்களுக்கும், இரவலர்களுக்கும் வழங்குவது அறமாகக் கொள்ளப் பெற்றது. தமிழரின் போர்முறை பற்றி நச்சினார்க்கினியரை குறிப்பிடும்போது போர்க்களத்தில், கோழைகளையும், மயிர் குறைந்தோரையும், பெண் பெயர் கொண்டோரையும், படைக் கருவிகளைக் கை நழுவ விட்டவரையும், ஒத்த படை எடாதோரையும் தமிழர்கள் கொல்லமாட்டார்கள் எனக் குறிப்பிடுகின்றார்.

சமயநெறிகளைக்கடைபிடிப்போர்க்கும் போரில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது. அவர்களுக்குப் போரால் பாதிப்பு ஏற்படாதவாறு பாதுகாக்கப்பட்டனர். இரவில் போர் புரிதல் அறமாகக் கொள்ளப்படவில்லை. வீரர் அல்லாதோரையும் புண்பட்டோரையும் முதியோரையும், இளையோரையும் தாக்குதல் அறமற்ற - அறிவிலார் செயலாகக் கருதப்பட்டது. பண்டைக் காலத்தில் வீரம் என்பதைக் குறிக்க “மறம்” என்னும் சொல் கையாளப்பட்டது.

***அரசவை பணிய வறம்புரிந்து வழங்கிய***
***மறம்புரி கொள்கை[14]***

சங்க காலத் தமிழ் மக்கள் இயல்பாகவே வீரப்பண்புடன் திகழ்ந்தனர் என்பதற்குப் புற இலக்கியங்களே மிகச் சிறந்த சான்றுகளாகும். வீரம் நிறைந்த சமுதாயமாக இருந்ததால் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஐம்படைத்தாலி அணிவித்த செய்தியைப் புறம் 70-ஆம் பாடல் குறிப்பிடுகின்றது.

மன்னர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போர் செய்தலை மேற்கொண்டனர். புகழ் அடைதல் அவர்களிடையே தலையாய உணர்வாக இருந்தது. இதனை,

***நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்***
***பாசறை யல்லது நீயொல் லரியே[15]***
***அருபுகழ் மேவலொடு கண்படை யிலனே[16]***

புகழ் தவிர நாட்டின் எல்லையை விரிவு செய்தல். குடிக்கடன், மான உணர்வு, செல்வ மேம்பாடு, மகட்கொடை மறுப்பு, வஞ்சினம் முதலியவற்றின் காரணமாகவும் போர்கள் நிகழ்ந்தன.

**முடிவுரை**

பண்டைய காலத்தில் அரசியல் அறத்தன்மை மிக்கதாகத் திகழ்தமைக்குப் பல்வேறு சங்க பாக்களும் சான்று பகிர்கின்றன.

நாட்டை எப்படி வேண்டுமானாலும் ஆளலாம் என்னும் நிலை மாறி இப்படித்தான் ஆளவேண்டும் என்ற வரைமுறைப் படுத்தப்பட்ட அமைப்பை உடையதாகப் பண்டைய அரசியல் இருந்தது. மக்களைப் காப்பதும் அவர்களின், நல்வாழ்விற்கு அடிப்படையான அமைதியை நிலை நாட்டுவதும் மன்னின் நோக்கமாக இருந்தது. அரசியல் தொடர்பான நிகழ்வுகள் அனைத்தும் அறவழிச் சிந்தனை உடையனவாகவே மேற்கொள்ளப் பெற்றன. நாட்டைக் காக்கும் பணி தொடங்கி அன்றாடச் செயல்பாடுகள் வரை கவனம் செலுத்திய பண்டைய அரசியலறம் பிற்கால அரசியல் சார்ந்த செயல்களுக்கு அடித்தளமாக அமைந்தன.

**சான்றெண் விளக்கம்**

1. சாமி - சிதம்பரானர், பழந்தமிழர்
2. அரசியல், ப. 42.
3. புறம். பா. 186 1- 4, ப. 351.
4. குறள். 388, ப. 221.
5. புறம். 72 ,7-12, ப. 153.
6. புறம். 35,14-15, ப. 86.
7. மதுரை. 489-492, ப. 202.
8. புறம். பா. 35, ப. 85.
9. புறம். பா. 229.20, ப. 58.
10. புறம். பா. 3:1:2, ப. 21.
11. நற்றினை, பா. 146:4, ப. 265.
12. புறம். பா. 35, ப. 85.
13. புறம். பா. 38, 13-16 ப. 164.
14. புறம். பா. 165, 10-11, ப. 314.
15. பதிற்றுப்பத்து, பா. 85, 9-10 ப. 404.
16. புறம். பா. 31:5-6, ப. 78.
17. அகம். பா. 214:7, ப. 248.

**துணைநின்ற நூல்கள்**


1. புலியூர்க் கேசிகண், புறநானூறு, பாரிநிலையம், 184. பிராட்வே, சென்னை, மறுபதிப்பு-2011.
2. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, பதிற்றுப்பத்து, தமிழ்மண் அறக்கட்டளை, பெரியார் குடில், முதற்பதிப்பு-2008.
3. ந.சி. கந்தையா, அகநானூறு, தமிழ் மண் அறக்கட்டளை, பெரியார் குடில், முதற்பதிப்பு-2008.
4. ச.வே. சுப்பிரமணியன், சங்க இலக்கியம் பத்துப்பாட்டு, கோவிலூர் மடாலயம், கோவிலூர், முதற்பதிப்பு-2003.
5. சாமி - சிதம்பரானர், பழந்தமிழர் அரசியல், இலக்கிய நிலையம் சென்னை, மூன்றாம் பதிப்பு - டிசம்பர், 1973.